# ரணவிரு சேவா அதிகாரசபை - 2012

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரணவிரு சேவா அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையால் வெளித்தரப்பினரிடமிருந்து மீளாய்வாண்டில் நன்கொடையாக பெறப்பட்டிருந்த 05 கணனிகள் மற்றும் 16 செயற்கைக் கால்களின் பெறுமதியைக் கணிப்பிட்டு கணக்குகளிற்கு எடுத்துவருதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபைக்குச் சொந்தமான அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் ஒரு பகுதி 2012 ஆம் ஆண்டில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காகச் சமர்ப்பிக்கப்படாத 26 வகைகளிற்குரிய 57 பொருட்கள், மாகாண அலுவலகங்களில் காணப்பட்ட பொருட்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பவற்றை ஒட்டுமொத்த கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வில் உள்ளடக்கி மீள்மதிப்பீட்டு நட்டம் தவறாகக் கணிக்கப்பட்டிருந்தது. நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்காமை மற்றும் வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காமை காரணமாக அவ்வாறு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதியினை தனியாக கணிப்பிட முடியவில்லை.

### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

சமூக மற்றும் கலாசார அபிவிருத்திப் பிரிவின் கீழ் வீடமைப்பு உதவி தவணைப் பணங்களிற்காக நலனாளிகளிற்கு செலுத்தவேண்டிய ரூபா 5,200,000 தொகை ஓராண்டிற்கும் மேலான காலமாக தீர்வுசெய்யப்படாது காணப்பட்டது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | அரசாங்கத்தின் சகல கூட்டுத்தாபனங்களினாலும் ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் பாதீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் அது அதற்குரிய நிதியாண்டு தொடங்குவதற்கு மூன்று மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு முன்னர் ஆளுகைச் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 பெப்ரவரி 09 ஆந் திகதியன்றே ஆளுகைச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அது ஆளுகைச் சபையால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ஆளுகைச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப் பிரமாணங்கள் | |
| (i) 104(3) | இடம்பெற்ற நட்ட இழப்பு தொடர்பில் முழுமையான அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களிற்கு மேற்பட்ட தாமதம் ஏற்படும் என எதிர்பார்ப்பின் அந்த நட்ட இழப்புக்கள் தொடர்பில் ஆரம்ப அறிக்கையொன்றை அனுப்பி வைக்க வேண்டிய போதிலும், அதிகாரசபையில் காணாமல் போன கணனி மற்றும் வாகன விபத்துக்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) 104(4) | நட்ட இழப்புக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பின்னர் நட்ட இழப்பு இடம்பெற்ற திகதியிலிருந்து முன்று மாதத்திற்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மேலே (ஆ) (i) இல் குறிப்பிடப்பட்ட 2 சந்தர்ப்பங்கள் தொடர்பாக அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் எதிர்வுகூறப்பட்ட ஐந்தொகை, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க, 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைகள் மற்றும் 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய டீஎம்ஏ/02 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் கணனி துணைப் பாகங்களின் நிலையான சொத்துப்பதிவேடு என்பன பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பரிசோதனை அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவு ரூபா 26,090,493 ஆன அரசாங்க பங்களிப்பைக் கருத்திற்கொண்ட பின்னர் ரூபா 2,294,685 ஆக காணப்பட்டதுடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 21,761,093 ஆன அரசாங்க பங்களிப்பைக்

கருத்திற்கொண்ட பின்னர் ரூபா 11,402,525 மிகையாகக் காணப்பட்டது. இதன் படி, மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 9,107,840 தொகையான வீழ்ச்சி காட்டப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்படுத்தல் செலவினம் ரூபா 28,395,713 ஆல் அதிகரித்திருந்தமை, அதிகாரசபையின் அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை மீள் மதிப்பீடு செய்தமையால் எழுந்த ரூபா 4,542,010 நட்டத்தினை வருமானச் செலவினக் கணக்கிற்கு சீராக்கியமை போன்றன இவ்வீழ்ச்சிக்கு விசேட காரணங்களாக இருந்தன.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் வருமானம் முன்னைய ஆண்டைக் காட்டிலும் ரூபா 28,698,453 ஆல் அதாவது 20 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) அதிகாரசபையின் செலவினத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 37,806,293 ஆல் அதாவது 29 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) அதிகாரசபையின் மொத்தத் தேறிய சொத்துக்கள் முன்னைய ஆண்டில் ரூபா 597,649,668 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அது ரூபா 594,824,285 வரை ரூபா 2,825,383 ஆல் குறைவடைந்திருந்தது.

## 2.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான நிகழ்வுகள்

மீளாய்வாண்டின் இறுதியளவில் வெளித்தரப்பினரால் நிறுவனத்திற்கு எதிராக 03 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணிகளைப் பகிர்ந்தளித்தல்

யுத்தகளத்தில் ஊனமுற்ற மற்றும் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் நலனோம்பலுக்காக அதிகாரசபை தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக காணிகளற்ற இராணுவ வீரர்களின் குடும்பங்களிற்காக வீடுகளை அமைத்துக் கொள்வதற்குப்

பொருத்தமான காணியினை வழங்குதல் அதிகாரசபையின் பிரதான நோக்கமாகும். அதற்குத் தேவையான காணிகள் பிரதேச செயலாளரிடமிருந்தும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்தும் பெறப்பட்டன. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவுடன் இனங்கும் வகையில் யுத்தகளத்தில் ஊனமுற்ற மற்றும் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களினதும் அவர்களில் தங்கியிருப்போரினதும் சகல தரவுகளையும் உள்ளடக்கி முழுமையான தகவல் முறைமையொன்றை நாளதுவரையாக பேணிவருதற்கு அதிகாரசபை இது வரை தவறியிருந்தது. ஆதலால் அத்தகைய காணிகளைப் பகிர்ந்தளிக்கையில் அவை தேவையாகவுள்ள இராணுவ வீரர்களை ஒளிவுமறைவின்றி தேர்ந்தெடுக்க முடியாதிருந்தது.

(ii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி ரணவிரு சேவா அதிகாரசபை பிரதேச செயலகங்களுடன் இணைந்து இராணுவ வீரர்களிற்குப் பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிட்டிருந்த 2004 ஆம் ஆண்டிலிருந்து கிடைத்திருந்த காணிகளின் எண்ணிக்கை 17 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 09 காணிகள் மாத்திரமே பகிர்ந்தளிக்கப்பட்டது. தனியார் நன்கொடையாளர்களிடமிருந்து 2001 ஆம் ஆண்டிலிருந்து கிடைத்திருந்த 06 காணிகளில் 03 மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் மற்றொரு காணி (யாகபத்த காணி) ஓய்வு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக தரைப் படையினருக்கு ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. பொது முயற்சிகள் குழுக் கூட்டத்திலும் இக்காணியைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

(ஆ) உடல் மற்றும் உள பலப்படுத்தல் பிரிவு

உடல் மற்றும் உள பலப்படுத்தல் பிரிவினால் 2012 ஆம் ஆண்டில் 42 உளவியல் நிகழ்ச்சித்திட்டங்கள், 21 கண் சிகிச்சை நிகழ்வுகள், 10 மருத்துவ சிகிச்சை நிகழ்வுகள், 05 ஊனமுற்ற இராணுவ வீரர் பயிற்சிச் செயலமர்வுகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது 11 உளவியல் நிகழ்ச்சித்திட்டங்கள், 17 கண் சிகிச்சை நிகழ்வுகள், 06 மருத்துவ சிகிச்சை நிகழ்வுகள், 04 ஊனமுற்ற இராணுவ வீரர் பயிற்சிச் செயலமர்வுகள் மற்றும் ஊனமுற்ற இராணுவ வீரர்களை பராமரிப்போரை அறிவுறுத்தும் செயலமர்வொன்று மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. ஆண்டின் தொடக்கத்தில் இப்பிரிவிற்காக ரூபா 9,330,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டில் ரூபா 5,446,305 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(இ) சமூக கலாசாரப் பிரிவு

(i) ஒன்றிணைத்தல்

இராணுவ வீரர்களை கௌரவித்து புகழ்சேர்க்கும் வகையில் நாடு முழுவதிலும் தனித்தனி குடும்பங்களாக பரவிக் காணப்படுகின்ற இராணுவ வீரர்களின் குடும்பங்களை ஒன்றுசேர்ப்பதன் மூலம் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்தி அவர்களை சமூக மற்றும் ஆத்மீக ரீதியில் பலப்படுத்தும் நோக்கில் பிரதேச செயலக மட்டத்தில் இராணுவ வீரரர்களின் பங்குபற்றுதலுடன் கூட்டிணைத்தல் குழுக்கள் தாபிக்கப்பட்டிருந்தன. இக் கூட்டிணைத்தல் குழுக்களை ஒருங்கிணைத்தலில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- இப் பிரிவின் கீழ் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் ஆண்டின் தொடக்கத்தில் திட்டமிடப்படாதிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட வேண்டிய ஒன்றிணைத்தல் மாநாடு 2013 சனவரி 09 ஆந் திகதியே நடாத்தப்பட்டிருந்தது
- 2012 இன் இறுதி 06 மாதங்களினுள் 20 மாவட்ட விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைபெற்றிருந்ததுடன் அதில் 14 நிகழ்ச்சித்திட்டங்கள் இரத்தினபுரி மற்றும் அம்பாறை போன்ற 02 மாவட்டங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. அதன் படி, சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய விதத்தில் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.
- நாடு பூராகவும் பரவுண்டு காணப்படுகின்ற கூட்டிணைத்தல் குழுக்களின் எண்ணிக்கை 272 ஆகும். 08 மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் தாபிக்கப்பட்டுள்ள அக் குழுக்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்திறனாக நடாத்திச்சென்று அங்கத்தவர்களை தக்க வைத்துக்கொள்வதற்காக மீளாய்வாண்டினுள் அதற்குரிய 07 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.
- தேசிய , மாகாண மற்றும் பிரதேச மட்டத்தில் விழாக்களிற்காக ரூபா 1,500,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 897,441 மாத்திரமே செலவிடப்பட்டிருந்ததுடன் அத்தொகை 2012 தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக செலவிடப்பட்டிருந்தது.

(ii) ரணவிரு கிராமங்கள்

ராணுவ வீரர்களின் பெயர்களை ஞாபகப்படுத்தும் மாதிரிக் கிராமங்களை தோற்றுவிப்பதற்காக அதிகாரசபையினால் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 39 ரணவிரு கிராமங்கள் காணப்பட்டதுடன்

அந்நோக்கங்களை அடைந்து கொள்வதில் பின்வரும் குறைபாடுகளைக் காணமுடிந்தது.

- உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் மாகாணமொன்றிற்கு ஒரு சனசமூக நிலையம் வீதம் 08 சனசமூக நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,000,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் அதற்காக ரூபா 742,827 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 04 சனசமூக நிலையங்களின் நிர்மாண வேலைகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.
- மீளாய்வாண்டினுள் அதிகாரசபையால் ரணவிரு கிராமங்கள் தொடர்பில் ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அக்கிராமங்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட வேண்டிய முறைகள் குறித்தும் முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட உதவிகளின் (சனசமூக நிலைய உதவிகள்) செயன்முன்னேற்றம் தொடர்பிலும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வீடமைப்பு உதவிகள்

சகல இராணுவ வீரர்களின் குடும்பங்களிற்கும் நிரந்தர வீடொன்றை உரித்தாக்கும் நோக்குடன் வீடமைப்புக் கடனிற்கு மேலதிகமாக யுத்த களத்தில் ஊனமுற்ற இராணுவ வீரர்களிற்கும் காணாமல்போன மற்றும் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் உறவினர்கள் மற்றும் தங்கிவாழ்வோரிற்கும் வீடுகளை வழங்குதல் மற்றும் அதற்காக உதவுதல் என்ற ரீதியில் தவணைப்பணமாக ரூபா 100,000 தொகையை வழங்குதல் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இடம்பெறுகின்றது. இதன்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ராணுவ வீரர்களின் நிலைமையினை இனங்காணும் தரவு முறைமை பூரணமற்றுக் காணப்படுகையில் நலனோம்பல் வசதிகள் கிடைத்தல் வேண்டுமென அதிகாரசபையால் (அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்டு 02 மாதங்களிற்குள் பூரணப்படுத்தப்பட வேண்டியவை) தற்போது முறையற்ற விதத்தில் இனங்காணப்பட்டுள்ள இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 35,099 ஆனதுடன் 2000 முதல் 2012 ஆம் ஆண்டு வரை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2856 பேருக்காக வீடமைப்பு உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) 2012 ஆம் ஆண்டின் போது இந்நோக்கத்திற்கு உதவிகளை வழங்குவதற்காக ரூபா 21,450,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும்,

அதற்காக 116 நலானாளிகளிற்கு ரூபா 13,280,000 அல்லது ஒதுக்கப்பட்ட தொகையில் 62 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) வீடமைப்பு உதவிகளை வழங்குதல் தவணை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த தவணைப்பணங்களை செலுத்தும் கால எல்லை நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. 2009 ஆம் ஆண்டில் முதலாம் மற்றும் இரண்டாம் தவணைப்பணமாக ரூபா 320,000 செலுத்தப்பட்டிருந்த 06 நலனாளிகளிற்கு எஞ்சிய தவணைப்பணமாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 280,000 தொகை 2013 மார்ச் 31 ஆந் திகதி வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2010 ஆம் ஆண்டில் 20 நலனாளிகளிற்கும் 2011 ஆம் ஆண்டில் 25 நலனாளிகளிற்கும் முறையே ரூபா 800,000 மற்றும் ரூபா 1,500,000 தவணைப்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், இறுதி தவணைப்பணமாக 2010 ஆம் ஆண்டிற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,200,000 தொகையும் 2011 ஆம் ஆண்டிற்காகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,000,000 தொகையும் 2013 மார்ச் 31 ஆந் திகதி வரை நலனாளிகளிற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) ஒரு தவணைப்பணம் செலுத்தப்பட்டு நீண்ட காலத்தின் பின்னர் அடுத்த தவணைப்பணம் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதிகாரசபையால் இவ் உதவிகளை வழங்குதல் தொடர்பில் முறையான நடைமுறையொன்று தயாரித்துக் கொள்ளப்பட்டிருக்காமை, முறையான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்காமை என்பன இதற்கான காரணங்களாகும் என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) கடன் வழங்குதல்

(i) ஊனமுற்ற மற்றும் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களிற்கும் அவர்களது குடும்பங்களிலுள்ள உறுப்பினர்களிற்கும் நிதி ரீதியான உதவிகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட ஒவ்வொரு கடன் வகை தொடர்பிலான பௌதீக மற்றும் நிதி ரீதியான இலக்குகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய செயலாற்றல் தகவல்கள் கீழுள்ளவாறாகும்.

| | கடன் வகை | எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட தொகை | எண்ணிக்கை | உள்ளபடியான தொகை |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | | ரூபா |
| i. | வீடமைப்புக் கடன் | | | | |
| | - சேவையிலுளன்ள | 35 | 7,000,000 | 35 | 5,560,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | - கூட்டிணைவுகள் | 356 | 70,000,000 | 356 | 61,330,000 |
| ii. | கிராமங்கள் | 30 | 1,500,000 | 25 | 1,250,000 |
| iii. | சுய தொழில் கடன்கள் | 25 | 2,500,000 | 20 | 1,500,000 |
| iv. | கல்வி | 10 | 500,000 | 5 | 400,000 |
| v. | மருத்துவக் கடன் | 10 | 1,000,000 | 3 | 300,000 |
| vi. | முற்சக்கர வண்டிக் கடன் | 200 | 60,000,000 | 93 | 31,300,000 |
| | | ---------- | ------------------- | ----------- | ------------- |
| | | 666 | 142,500,000 | 537 | 101,640,000 |
| | | ===== | ========== | ====== | ========= |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அதிகாரசபையின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை வழங்கப்பட்டிருந்த கடன்களின் எண்ணிக்கை 5940 ஆக காணப்பட்டதுடன் அதற்காக ரூபா 937,862,885 செலவிடப்பட்டிருந்தது. அதன்போது வழங்கப்பட்டிருந்த கடன்களில் அதிகளவானவை ஒன்றிணைத்தல் வீடமைப்புக் கடன்களாக காணப்பட்டதுடன் கடன் பெறுனர்களிற்கு உண்மையாகவே அக்கடன் தொகை தேவைப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பொருத்தமான தரவு முறையொன்று அதிகாரசபையால் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கடன் வழங்குவதற்காக பொருத்தமான முறையொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் பல வருடங்களாக கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தியிருந்த புகைப்படத்தினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகின்ற பரிந்துரையின் மீது கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது.

- முன்னைய ஆண்டில் வழங்கப்பட்டிருந்த கடன்களுக்குரிய 129 தவணைப்பணங்கள் மற்றும் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த 436 கடன்களுக்காக (கல்வி, மருத்துவ மற்றும் முற்சக்கர கடன்கள் நீங்கலாக) 2012 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 77,505,000 ஆன போதிலும், அதில் ரூபா 3,500,00 பெறுமதியான 15 வீடமைப்பு மற்றும் சுயதொழில் கடன்களுக்காக மாத்திரமே பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்த ரூபா 600,000 மொத்தமான கடன் தொகையிலிருந்து ரூபா 413,228 நிலுவையாக

காணப்பட்டதுடன் அதிகாரசபை 2013 மார்ச் 15 ஆந் திகதி வரை அக்கடன் தொகை தொடர்பில் இறுதி முடிவுக்கு வருவதற்கு தவறியிருந்தது.

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 14 சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருந்த ரூபா 1,086,640 முற்பணங்களில் ரூபா 452,880 தொகை அதிகாரசபைக்கு மீளச் செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 633,760 இற்காக சிட்டைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் தொடர்ந்தும் முற்பணமாகக் கருதப்பட்டு முன்கொண்டு வரப்பட்டிருந்தது. மேலும், 29 சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருந்த ரூபா 1,315,340 முற்பணங்களை தீர்ப்பதற்காக உரிய செயல் முடிவுற்று 02 மாதங்கள் முதல் 06 மாதங்கள் வரை காலதாமதம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) களஞ்சிய இருப்பு அறிக்கைகளை பேணிவருதல்

(i) களஞ்சியத்திற்கு கிடைத்த மற்றும் வழங்கப்படுகின்ற பொருட்கள் தொடர்பில் கொள்கல அட்டைகள் மற்றும் இருப்பு பேரேடுகள் பேணிவரப்பட்டிருக்காமையும் களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த பொருட்களிற்காக அந்தந்தக் களஞ்சியங்களில் பொருட் பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

(ii) களஞ்சியத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிரந்தர களஞ்சியக் காப்பாளர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன் கணனி உதவியாளர் ஒருவரினால் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

(அ) ரணவிரு பெற்றோர் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டம்

இந் நிகழ்ச்சித்திட்டம் அதிகாரசபையின் நோக்கங்களுடன் நேரடியாகத் தொடர்புபடாதிருந்ததுடன் விசேட அங்கீகாரத்தின் மீது பொதுப் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் இராணுவ வீரர்களின் பெற்றோர்களிற்காக மாதாந்தம் ரூபா 750 வீதம் படியொன்றைச் செலுத்துவதற்காக நிதி வழங்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டில் அதற்காக அதிகாரசபையால் ரூபா 1,667,250 செலுத்தப்பட்டிருந்ததுடன் 2013 மார்ச் வரை அதன் கீழ் எவ்வித தவணைப்பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

இருந்த போதிலும், இந் நிகழ்ச்சித்திட்ட திறப்பு நிகழ்விற்காக அதிகாரசபையின் 04 செலவின விடயங்களிலிருந்து பணம் பெற்றுக்கொள்ளப்பட்டு முறையே மேடை தயாரிப்பதற்காக ரூபா 740,846 தொகையும், பிரச்சார திட்டத்தினைத் தயாரிப்பதற்காக ரூபா 7,185,696 தொகையும் புதினப்பத்திரிகை அறிவித்தலை வெளியிடுவதற்காக ரூபா 9,315,480 தொகையும் போக்குவரத்து மற்றும் ஏனைய செலவினங்களிற்காக ரூபா 2,300,620 தொகையுமாக ரூபா 19,542,642 செலவிடப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(அ) ரணவிரு வாழ்வாதார எழுச்சித் திட்டம்

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இராணுவ வீரர்களிற்கு ரூபா 500,000 வரை சுயதொழில் கடன் தொகையினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வங்கியினூடாக வழங்குவதற்காக நிதி வழங்கப்படும் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் இந் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய வைபவத்திற்காகவும் ஏனைய நடவடிக்கைகளிற்காகவும் அதிகாரசபையால் செய்யப்பட்ட செலவினம் ரூபா 2,819,635 ஆகும். ஆண்டின் தொடக்கத்தில் பாதீட்டினால் இதற்காக நிதி ஏற்பாடு செய்யப்படாதிருந்ததுடன் ரணவிரு நலனோம்பலிற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏனைய நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்டிருந்தமை அதிகாரசபையின் நோக்கங்களிற்கு முரணான செலவினம் என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.4 நிதிகளின் குறைப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையால் 2012 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீடு 2012 செப்தெம்பர் 14 ஆந் திகதியன்றும் 2013 பெப்ரவரி 22 ஆந் திகதியன்றும் திருத்தப்பட்டிருந்தன. இத் திருத்தத்தின் மூலம் ஆண்டின் தொடக்கத்தில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிரக்காத நிகழ்ச்சித்திட்டங் களிற்காக நிதி பெற்றுக்கொள்ளல் மற்றும் ஏற்பாடுகள் செலவிடப்படாதுள்ள நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து ஏற்பாடுகள் முடிவடைந்துள்ள நிகழ்ச்சித்திட்டங் களிற்காக நிதிகளை மாற்றீடு செய்தல் இடம்பெற்றிருந்தன.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்காமை காரணமாக மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட செலவினங்களுடன் ஒப்பிடுகையில் அதிகாரசபையின் மீண்டெழும் செலவினங்களில் 10 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான வீச்சிலும் மூலதனச் செலவினங்களில் 36 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சிலும் முரண்கள் காணப்பட்டன.

## 3.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

GB 4742 ஆம் இலக்க வாகனம் ரூபா 340,760 செலவில் திருத்தப்பட்டதன் பின்னர் 2011 ஏப்ரல் 20 ஆந் திகதி அலுவலகத்திற்கு எடுத்து வரப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஏறத்தாழ 4500 கி.மீ ஓடிய பின்னர் 2011 யூலை 29 ஆந் திகதி முதல் மீண்டும் ஓடப்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தமையால் அன்று முதல் பயன்படுத்தப்படாது விளைவற்றதாக அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.6 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மொபிட்டல் செல்லிடத் தொலைபேசித் தொடர்பு

எழுத்துமூல மாற்றம் செய்யப்படாமல் பயன்படுத்தி வரப்பட்டிருந்த செல்லிடத் தொலைபேசித் தொடர்பு காணாமல் போயிருந்ததுடன் அதற்குரிய 4 மாதங்களிற்கான தொலைபெசிக் கட்டணமான ரூபா 35,294 தொடர்பில் பொறுப்புடைய தரப்பினர்களை இனங்காண முடியாமை காரணமாக அதிகாரசபையால் அப்பட்டியல்கள் செலுத்தப்பட்டிருந்தன. அத்துடன் பட்டியல்களைச் செலுத்துவதற்கு முன்னர் தொலைபேசியினைப் பயன்படுத்தும் உத்தியொகத்தரிடமிருந்து பட்டியல்களை பரிந்துரைசெய்யும் முறையொன்றும் அதிகாரசபையால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 யூன் 24 ஆந் திகதி அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனமொன்று விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் அதனால் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 163,830 என கணிப்பிடப்பட்டிருந்தது. வாகனம் உரிய பெறுமதியைக் காட்டிலும் குறைவான பெறுமதிக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தமையால் காப்புறுதிக் கம்பனியால் ரூபா 63,385 இனை மாத்திரம் அதிகாரசபைக்குச் செலுத்துவதற்கு இனங்கப்பட்டிருந்துடன் எஞ்சிய ரூபா 100,445 நட்டம் அதிகாரசபையால் பொறுப்பேற்க வேண்டியிருந்தது.

## 3.7 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

கொள்வனவு வழகாட்டல்கள் கோவையின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் வேலைகளிற்கான ஒப்பந்தங்களின் ஒப்பந்தத் தொகையில் உயர்ந்தபட்சம் 20 சதவீதம் முற்பணமாகச் செலுத்தப்பட முடியுமான போதிலும், ரூபா 740,846 மற்றும் ரூபா 7,185,696 பெறுமதியான 2 ஒப்பந்த வேலைகளிற்காக 50 சதவீத முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

## 3.8 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

பதவியணியினர் முகாமைத்துவம்

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரம் | 24 | 16 | 08 |
| நிறைவேற்றுத்தரமற்ற | 07 | 07 | - |
| ஏனையோர் | 13 | 13 | - |
| | 44 | 36 | 08 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட உள்ளபடியான பதவியணியில் செயற்திட்ட முகாமையாளர், சட்ட உத்தியோகத்தர், செயற்திட்ட உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களாவர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் கணக்காளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுவதுடன் அதன் காரணமாக அதிகாரசபையில் நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகள் ஒழுங்கு முறையின்றி இடம்பெற்று வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகாரசபையின் பதவியணியின் ஒவ்வோரு உத்தியோகத்தர்களிற்கும் தமது பதவிக்குரிய வேலைகள் எழுத்து மூலம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சில உத்தியோகத்தர்கள் தமது பதவிக்குரித்தான கடமைகளுக்குப் புறம்பான ஏனைய கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஈ) நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்ததுடன் ஏனைய நிர்வாக நடவடிக்கைகள், கொள்வனவு நடவடிக்கைகள் களஞ்சிய மற்றும் போக்குவரத்துப் பிரிவின் நடவடிக்கைகள் என்பன உள்ளடங்கலாக தனிப்பட்ட கோவைகளைப் பேணிவருதல் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள கணனி உதவியாளர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்றிருந்தன.

(உ) கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட கோவைகளிடையே ஐந்து உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருப்பினும் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டமைக்கான எழுத்துமூலச் சான்றுகள் காணப்படவில்லை.

(ஊ) நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளிற்கு முரணாக 06 உத்தியோகத்தர்களிற்கு சம்பள ஏற்றங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

(எ) 2007 திசெம்பர் 28 ஆந் திகதி முதல் இடைநிறுத்தப்பட்ட அதிகாரசபையின் கணக்காளர் பதவியில் கடமையாற்றிய பெண் உத்தியோகத்தர் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய உள்ளக ஒழுக்காற்று நடவடிக்கைகள் 2012 திசெம்பர் 31 வரை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. 2004 பெப்ரவரி 15 ஆந் திகதிய 6/2004 ஆம் இலக்க

பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி உத்தியோகத்தரின் பதவி இடைநிறுத்தப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டிற்குள் குறித்த ஒழுக்காற்று நடவடிக்கைகளை முடிவுறுத்தி ஒழுக்காற்றுக் கட்டளையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இடைநிறுத்தப்பட்டு 05 ஆண்டுகள் கடந்த பின்னரும் அந் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. இடைநிறுத்தப்பட்ட திகதியிலிருந்து உத்தியோகத்தருக்கு அரைச் சம்பளம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் வரை அவ்வாறு ரூபா 844,080 செலுத்தப்பட்டிருந்தது.

### 3.9 ஊழியர் பணிக்கொடைக்காக நிதியமொன்றைக் கட்டியெழுப்புதல்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் மொத்த பணிக்கொடை ஏற்பாடு ரூபா 5,780,435 ஆன போதிலும் அத் தொகையினை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 08 மாதங்கள் கடந்த பின்னர் 2013 நவம்பர் 21 ஆந் திகதியன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், வரைவு ஆண்டறிக்கை கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

2012 - 2017 ஆம் ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

i. நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற வளங்கள்

ii. அமைப்பு வரைபடம்

iii. முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகளின் பகுப்பாய்வு

iv. திட்டமிடப்பட்ட காலத்தினுள் அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் பொறுப்புடைய தரப்பினர்களை தெளிவாக இனங்காணக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம்

## 4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

கொள்வனவு வழகாட்டல்கள் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் அதிகாரசபையால் 2012 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டத்திலுள்ள மீளாய்வாண்டிற்கான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பாதீட்டு நிதி ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் அந் நிதிகளை ஆண்டின் போது பயன்படுத்தும் முறைகள், நிதி மற்றும் பௌதீக இலக்குகளின் பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள உள்ளபடியான மீதிகளுடன் ஒப்பிட்டு தேவையான திருத்தங்களுடன் உரிய இலக்கு நோக்கி செயற்படுதல் வேண்டுமாயினும், அவ்வாறான பாதீட்டுக் கட்டுப்பாடொன்று நிறுவனத்தில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.5 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவுற்று 150 தினங்களிற்குள் அதிகாரசபையின் நடவடிக்கைகள் தொடர்பான ஆண்டறிக்கையும் கணக்குகளும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் 2011 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கை 2013 மார்ச் 20 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்

2012 நவம்பர் 15 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த பணிப்புரைகளை செயற்படுத்தல் நிலைமை கீழுள்ளவாறாகும்.

யுத்த களத்தில் மரணித்த, காணாமல் போன மற்றும் ஊனமடைந்த இராணுவ வீரர்களினதும் ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களினதும் அவர்களில் தங்கி வாழ்வோர்களதும் தகவல்கள் மற்றும் இராணுவ வீரர்களிற்காக அதிகாரசபையால் வழங்கப்பட்ட பல்வேறு நலனன்கள், தகவல்கள் என்பவற்றை உடனடியாகக் பெறக்கூடிய பதிவேடொன்று அல்லது முறையொன்றை தாபித்தல் செயற்பாடுகள் 2013 மார்ச் 20 ஆந் திகதி வரை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டமையால் அக் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) மனித வள முகாமைத்துவம்

(இ) பதிவேடுகளைப் பேணி வருதல்

(ஈ) செயலாற்றல்

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு